# விளம்பரம்™

VLAMBARAM™

☎ 416-282-8059   416-282-4978

சமூக முன்னேற்றப் பத்திரிகை   மாதமிருமுறை   இலவசம்



தமிழ்த் திரைப்படங்களும் திரைக்கதையும் வாசியுங்கள்

உலகத் தமிழோசை


காலாண்டு சஞ்சிகை

தமிழ் வர்த்தக நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.



நதி 12   JULY 01, 2002   பாலம் 13


# HAPPY BIRTHDAY! CANADA



**கனடா:** யூலை 1ஆம் திகதி கனடாவின் பிறந்த நாளாக கொண்டாடப்படுகின்றது. 1867ம் ஆண்டு யூலை 1ஆம் திகதி கனடா உருவாகியபோது முதலாவது பிரதம மந்திரியாக இருந்தவர் சேர். ஜோன். எ. மக்டொனால்ட் அவர்கள். இவர் ஸ்கொட்லாந்தின் Glasgow என்ற நகரத்தில் ஜனவரி 11, 1815ம் திகதி பிறந்தவர். தனது பதினைந்தாவது வயதில் பாடசாலையின் படிப்பிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டார். இருந்த போதிலும் தானாக இல்லத்திலிருந்து தனது படிப்பைத் தொடர்ந்து சட்டத் தொழிலில் 17 வயதில் சேர்ந்து கொண்டார். 32ஆவது வயதில், மேற்கு கனடாவில் உள்ள மாகாண சபைக்கு அங்கத்தவராக தெரிவு செய்யப்பட்டார். அவரின் திறமையால் 1867ம் ஆண்டில் நாலு மாகாணங்களை ஒருங்கிணைத்து கனடாவை உருவாக்கினார். ஆரம்பத்தில் சேர்ந்து கொண்ட நாலுமாகாணங்கள் முறையே ஒன்ராறியோ, கியூபெக், நியூபுறன்ஸ்வீக், நோவாஸ்கோசியா ஆகும். பிற்பாடாக பிரிட்டிஸ் கொலம்பியாவும், பிரின்ஸ் எட்வேட் ஐலண்ட் உம் சேர்ந்து கொண்டது. இம்மாகாணங்களுடன் இறுதியாக இணைந்து கொண்ட மாகாணம் நியூபவுண்ட்லாண்ட் (New Fondland). ஆகக் கூடுதலான பிரெஞ் மொழி பேசும் மாகாணமாக கியூபெக் விளங்குகிறது. கனடாவில் ஆங்கிலம், பிரெஞ் ஆகிய இரு மொழிகள் அரச கரும மொழியாக உள்ளது.

தொடர்ச்சி: பக்கம் 09

**4வது புதுவருடத்தில் கால்பதிக்கும் CTR வானொலிக்கு எமது வாழ்த்துக்கள்** பக்கம்: 10




**வீடு விற்க, வாங்க...**

**Raja M. Mahendran, P. Eng.**
(Sales Rep.)

**Office: 416.491.4002 Pager: 416.589.4270**

இன்றைய சேவையே நாளைய வெற்றி!


## அருள் விருந்து

* நலம் உறுதற்கு உற்ற உபாயங்களுள் நல்லார் இணைக்கும் தலைசிறந்தது.

* உள்ளத்தில் உதிக்கின்ற ஒவ்வாத எண்ணங்களை உடற்கூறு காட்டிவிடுகிறது.

* சான்றோர் சிறப்பு அனைத்துக்கும் இருப்பிடம் ஆகின்றனர்.

* நீ உச்சரிக்கும் மந்திரத்தில் முழு நம்பிக்கை வை. அது உனக்கு எல்லா நலனையும் அளிக்கும்.

- செ. சிவசுப்பிரமணியம்


**Singapore Communication**

- ❖Reliable & Friendly Service
- ❖50 mins day time Free
- ❖Evenings & Weekend Free
- ❖Every Day (12noon - 1p.m) Free
- ❖Refer a friend & Receive a Free Gift
- ❖Add.Day time min 0.30cts only
- ❖Ask.$50/M - U/L Incoming call

**Free Phone & $30.00 Plan***

- **Call waiting, Conference Calling & Voice Mail Free**

**Pl.Call: Sathi /Ashma**

**Store: 416.740.5292 Cell: 416.717.6302**

5010 Steeles Ave., W., Unit 17ABC - Kipling & Steeles



**சிவாகம கிரியா பீடம்**

**(416) 724-7480**

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

**சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

**மு. காசிப்பிள்ளை & சன்ஸ்**

**416.267.8221**



**Insurance & Financial Services**

**Balan Kanapathi (Agent)**

- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel+ Business



LIBERTY MUTUAL.   London Life

**•416.321.1515 •905.294.2429**

**4433 Sheppard Ave. E. Suit 200, (Brimley/Sheppard)**

# அறிவும் ஆக்கமும்

105

விஜய குலத்துங்கம்



ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. 'You are what you eat'. நீங்கள் என்ன உணவை உண்கின்றீர்களோ, அதைப் பொறுத்துத்தான் நீங்களும் அமைவீர்கள். உங்கள் தேகா ரோக்கியம், வாழுங்காலம் ஆகியவற்றை உங்கள் உணவு நிர்ணயிக்கின்றது. பண்டைய காலத்தில் இருந்து அனுபவம் மூலம் சில உணவுகள் சிறந்ததென கருதப்பட்டு வரு கின்றது. ஆனால் அந்த உணவுகள் எல்லாமே சிறந்ததென்று கூறிவிட முடியாது. அதே நேரத்தில் அவர்கள் குறிப்பிடாத உண வெல்லாம் கூடாது என்று கூறிவிடமுடியாது.

இப்போதுள்ள நவீன விஞ்ஞான வசதிகளால் ஒவ்வொரு உணவுப் பொருளிலும் என்னென்ன உணவுச் சத்துக்கள் இருக்கின்றதென்பதைக் கண்டறியக் கூடியதாயுள்ளது. முன்னரெல்லாம் சத்துள்ள உணவு என்றால் புரதம், விற்ற மின்கள் மற்றும் கனிப்பொருட்கள் நிறைந்தவை எனக் கருதினார்கள். ஆனால் அண்மைக் காலங் களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் இருந்து, புற்றுநோய் மற்றும் பல வியாதிகளைக் கட்டுப்படுத்தக் கூடிய பல்லாயிரக் கணக்கான சேர்வைகள் வெவ்வேறு உணவுப் பொருட் களில் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சாதாரணமாகக் கிடைக்கும் உணவுப் பொருட் களில் மிகச் சிறந்தது என ஆராய்ச்சியாளர்கள் கருதும் சில உணவுப் பொருட்கள் பற்றியும் அவற்றுள் இருக்கும் நன்மை பயக்கக் கூடிய சேர்வைகள் பற்றியும் பார்ப்போம்.

மரக்கறிகளிலேயே மிகச் சிறந்தது என ஆராய்ச்சியாளர்கள் கருதுவது Broccoli. முன்னைய காலங்களில் உணவில் அதிகளவில் உபயோகப் படுத்தப்படவில்லை. இப்போதும் அதிகமானவரின் சமையலில் இடம்பெறுவதும் இல்லை. ஆனால் மேற்குநாட்டவர்களும், சீனர்களும், ஜப்பானி யர்களும் நிறையவே உபயோகிப்பார்கள். Broccoli என்பது கோவாப் பயிர் இனத்தைச் சேர்ந்தது. கடும் பச்சை நிறமாக இருக்கும். தாவரத்தின் விரியாத மலர்க் கொத்துதான் மரக்கறியாகப் பாவிக்கப்படும் பகுதியாகும். Broccoli இல் phytochemical என்னும் சேர்வைகள் நிறையவே காணப்படும். இதில் காணப்படும் sulforaphane, Indole - 3 - Carbinol ஆகிய பைற்றோ கெமிக் கல்கள் புற்றுநோயை உருவாக்கும் பதார்த்தங்களின் நச்சுத் தன்மையை அகற்றி புற்றுநோய் வராமல் தடுக்கும். அத்துடன் Indole - 3 - carbionl ஆனது பெண்களின் மார்புப் புற்றுநோயைத் தடுக்கவும் உதவுகின்றது. இதைவிட Broccoli ஆனது colon புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய் வராமலும் தடுக்கக் கூடியது. Broccoli இல் காணப்படும் beta-carotene, fibre எனப்படும் நார்கள் விற்றமின் 'C' ஆகியனவும் உடலுக்கு நல்லது. தோடம் பழத்தைவிட Broccoli இல் கூடுதலாக விற்றமின் 'C" காணப்படும். Broccoli ஐ இலேசாக நீராவியில் அவித்து வாயில் நன்கு சப்பிச் சாப்பிடும் போதுதான் அதன் முழுப் பல்னையும் நாம் பெறக்கூடியதாக இருக்கும்.



தக்காளிப் பழமும் சிறந்த உணவாகும். கெச்சப் - ketchup மற்றும் source ஆகியவற்றில் காணப்படும் அவித்த தக்காளிப்பழத்திற்கு சமிபாட்டுத் தொகுதியின் புற்றுநோய், மற்றும் ஆண் உறுப்பில் வரும் prostrate cancer ஆகிய நோய்த் தடுப்பிற்கும் நிறைய சம்பந்தம் உண்டு எனக் கூறப்படுகின்றது. தக்காளியில் காணப்படும் lycopene என்ற antio-oxidants அறியப்பட்ட carotenoids களில் மிகச் சிறந்தது எனக் கூறப்படுகின்றது. Carotenoid தான் பழங்களினதும், கரட் போன்றவற்றினதும் கடும் மஞ்சள் நிறத்திற்குக் காரணம். Lycopene ஆனது beta-caroteneஐ விட சிறந்ததென தற்போது அறியப்படுகின்றது. Lycopene புற்றுநோயை தடுக்கவும், கொலஸ்ரோலைக் குறைக்கவும் உதவும். தக்காளி சமைக்கப்படும் போது lycopene ஆனது தனியாக விடுபட்டுவிடுவதால் உடனடியாக சமிபா டடைந்து உடலில் சேரக் கூடியதாகவுள்ளது. சமைக்காத உடனடி தக்காளியில் அதிக விற்றமின் 'C' உண்டு.

இன்னுமொரு நல்ல உணவு பொதுவாக இங்கு spinach என அழைக்கப்படும் கீரை வகை யாகும். கீரையில் இரும்புச்சத்தும், folate என்னும் விற்றமின் 'B' உம் உண்டு. இந்த folate ஆனது இரத்தக் குழாய்களைத் தாக்கி, இருதய வியாதிகளை உண்டு பண்ணும் homocystein எனப்படும் அமினோ அமிலத்தின் அளவை இரத்தத்தில் குறைக்கின்றது. இதைவிட கீரையில் lutein, zeaxanthin ஆகிய phytochemical களும் இருப்பதால் தசைநார்கள் வலிமையற்றுப் போவதையும் தடுக்கின்றது. இந்த தசைநார்களின் நலிவு காரணமாகத்தான் கண்பார்வை குறைவும், கண்பார்வையற்றுப் போகும் நிலையும் உண்டாகின்றது. எனவே கீரை வகை உடலிற்கு பல வகைகளிலும் நன்மை பயக்கின்றது.




மாமிச வகைகள் உடலுக்கு கொழுப்புகள் மூலம் தீமை விளைவித்தாலும், மீன்களால் உடலுக்கு மிகுந்த நன்மை கிடைக்கின்றது. மீன்களுள் சிறந்தது salmon மீனாகும். பலர் எண்ணுவது இது கொழுப்பு நிறைந்த மீன் என்றுதான். ஆனால் இதில் காணப்படுவது எங்கள் உடலில் உள்ள LDL அல்லது Triglyceride எனப்படும் கூடாத கொலஸ் ரோலைக் குறைக்கக் கூடியது. Salmon மீனில் Omega - 3 - faty acid எனப்படும் கொழுப்பு உள்ளது. குருதிச் சிறுதட்டுகள் இரத்த நாடிகளில் ஒட்டி plaque என்னும் படிவத்தை உண்டாகுவதை இந்த பதார்த்தம் தடுக்கின்றது. அத்துடன் acid ஆனது மூளையிலுள்ள கலங்களில் கொழுப்பு படிவதைத் தடுப்பது மூலம் மூளைக் கலங்கள் முதிர்வடைவதைத் தடுக்கின்றது. அத்துடன் Alzheim போன்ற மூளை வியாதிகளைக் குறைக்கும். Salmon ஐப் போல் mackera மீனும், blue fish மீனும் omega - 3 - fatty acid நிறைந்தவை. எனவே இந்த மீன்களையும் அதிகம் உண்ணுவது நல்லது.

உள்ளி எனப்படும் garlic இக்கும் உடலுக்கு நல்லது என்பது அனைவரும் அறிந்த விடயம். இதில் கந்தகம் சேர்ந்த சேர்வையான allyl sulfides காணப்படும். Sulfides கள் கொலஸ் ரோலை குறைக்க உதவும். அத்துடன் உள்ளியானது பக்டீரியா, பங்கசுக்களுக்கு எதிராக தொழிற்பட வல்லதால் பல நோய்களும் வராமல் தடுக்கின்றது. சில ஆராய்ச்சி முடிவுகளின் படி மலேரியாவை உண்டுபண்ணும் ஒட்டுண்ணியையும் கட்டுப்படுத்தக் கூடியது எனவும் கூறப்படுகின்றது. இதைவிட tumour எனப்படும் கட்டிகள் உண்டாகமல் தடுக்கக் கூடியது. உள்ளியின் முழு நன்மையைப் பெற வேண்டுமானால் அதை மிகச் சூடாக சமைக்கக் கூடாது. அதாவது எங்கள் சமையல் முறையில் அதன் வல்லமை எல்லாம் அற்றுப் போகின்றது. உள்ளியை நன்கு நசித்து பசையாக்கி சூடாக இல்லாமல் பாவிக்க வேண்டும். முழு உள்ளியை அப்படியே பாவிப்பதாலும் பிரயோசனம் இல்லை.

எல்லாப் பழங்களிலும் மிகச் சிறந்த பழம் blue berries எனப்படும் இந்தப் பழம் முந்திரிகைப் பழம் போல அல்லது திராட்சைப் பழம் போல கடும் நீல நிறமாக சிறியதாக இருக்கும். இந்தப் பழங்களில் மற்ற எல்லாப் பழங்களையும், மரக்கறிகளையும் விட anti-oxidants அதிகமாகக் காணப்படும். இதில் முக்கியாமான பொருள் Anthocyanin எனப்படும் phytochemical ஆகும். தனியே blue berry பழங்கள் கொண்ட உணவைக் கொடுத்து வளர்க்கப்பட்ட எலிகளில் செய்த பரிசோதனைகளில் இருந்து வயது சென்றாலும் ஞாபக சக்தி குறையாமல் இருந்தது அவதானிக்கப்பட்டது. அத்துடன் சுறுசுறுப்பாக இயங்கக் கூடியதாகவும் இருந்தன. எனவே blue berries சாப்பிடாதவர்கள், அவற்றை வாங்கி உண்ணுதல் நல்லது. Blue berries சேர்ந்த யோக்கட் வாங்கிக் கூடச் சாப்பிடலாம்.

Nuts எனப்படும் விதைகளில் பொதுவாக கொழுப்பு, எண்ணை உள்ளது. அது கூடாது என்ற கருத்து பொதுவாக நிலவுகின்றது. அது தவறாகும். ஆனால் nuts அல்லது விதைகளில் இருப்பது mono unsaturated acids உம், polyunsaturated acid களும் ஆகும். இது உடலிலுள்ள கூடாத LDL கொலஸ்ரோலைக் குறைக்கும். Pecans எனும் விதைகளிலும் walnut என்னும் விதைகளிலும் ellagic acid என்னும் phytochemical உண்டு. இவை புற்றுநோய் வராமல் தடுக்க வல்லது. அதைவிட விதைகளில் அதகளவு விற்றமின் E உம் காணப்படும். இதுவும் புற்றுநோய், இருதய நோய்களைக் குறைக்கும்.

Red wine எனப்படும் திராட்சை ரசமும் உடலுக்கு நல்லது. பிரெஞ்சுக்காரர்கள் வெண்ணெய், சீஸ் போன்ற பால் உணவுப் பொருட்களையும், இறைச்சி வகைகளையும் அதிகமாக உட்கொண்டாலும், Redwine அருந்துவதால் அவர்களுக்கு இருதய வியாதி வருவது குறைவு எனக் கூறப்படுகின்றது. Red wine தயாரிக்கப்படும் சிவப்பு திராட்சைகளின் தோலில் அதிகளவு anti - oxidants என அழைக்கப்படும் resveratol எனப்படும் pdyphenol காணப்படும். இது HDL எனப்படும் நல்ல கொலஸ்ரோலை அதிகரிக்கும். அத்துடன் இரத்த நாடிகள் தடிப்பு அடைவதை அல்லது இறுகுவதை தடுக்கின்றது.



எனவே நல்ல உணவு வகைகளைத் தேர்ந்தெடுத்து அளவாகச் சாப்பிட்டால் (பசித்துப் புசித்தல்) நல்ல ஆரோக்கியத்துடன் நீண்டகாலம் வாழலாம்.

• • • • • •

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களையும் நீங்கள் எவ்வகையான விடயங்களைக் இக் கட்டுரையில் எதிர் பார்க்கிறீர்கள் என்பதையும் விஜே குலத்துங்கம், 361 Highglen Ave., Markham, Ont., L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது wijeyalku@hotmail.com என்ற முகவரிக்கு அனுப்பவும்.


நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையை விடுங்கள்

கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற





Vitaplex

சம்போ அன்ட் கன்டிஷனர்

உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.

Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra

கிடைக்கும் இடங்கள்

ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்ஸிஸாக எதோபிக்கோ மற்றும் மொன்றியாலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலு கிடைக்கின்றது.

திருமண சேவை



உங்கள் விருப்பத்திற்கேற்ப மணமகன், மணமகளைத் தெரிவு செய்ய சாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளுங்கள். எமது சேவையின் பலனைப்பெற்ற தம்பதிகள் பலர். உலகெங்கும் பரந்து தொடர்புகள் குன்றி வாழும் எம்மவர்களின் தேவையே எமது சேவை.

416 261-6219

Email: ratnm51@hotmail.com

WEEKLY AFTER 6:00PM / WEEKENDS ANYTIME

J DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை
* மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை
* சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $60.00

தினசரி நடவடிக்கைகள்

* உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு வெளிப்புறச் சுற்றுலா

தொடர்புகளுக்கு: Mrs.S.J. சௌந்தரநாயகம்

151 Lamareaux Dr., TownHouse 99A (Finch / Birchmount) 416-502-3033

# APPLEMORE AUTOMOTIVE

Apple Apple Apple

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility




Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


### தெரிந்து கொள்ளுங்கள்

✳ மாணவர்களுக்கு இரண்டு கைகளாலும் எழுதக் கற்றுக் கொடுக்கும் நாடு - ஜப்பான்.

✳ வெள்ளை நிறத்தை துக்கத்தின் சின்னமாகக் கொண்டு உள்ள நாடு - சீனா.


✳ காந்திஜியின் உருவப் படத்தை தபால் தலையாக முதன் முதலில் வெளியிட்ட நாடு - அமெரிக்கா.


14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

(416) 267-0408


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 132




**இடமிருந்து - வலம்**

1. சுமாராக
4. நீர்நிலைஒன்று (வல - இட)
5. பல்லக்கு
6. விழி (வல - இட)
8. சிறு வட்டில்
10. நீக்கு
13. தமிழீழத்தின் ஓர் ஊர்

**மேலிருந்து - கீழ்**

1. பெற்றுக் கொள்
2. ஆசிரியர்
3. மகிழ்ச்சி
4. சதங்கை
6. இடம்
7. எடைக்கல் (கீழ் - மேல்)
9. தோற்றம்
11. அடிப்படை
12. தொடக்கம்
14. வேகம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| து | ரி | யோ | த | ன | ன் | | |
| வ | தி | | ண் | | | ர் | கா |
| ர் | | ம் | ட | ட் | வ | | |
| ப் | | | வா | | று | யி | ஞா |
| பு | த் | த | ள | ம் | | | |
| | | | ம் | | னை | த | சோ |
| ரு | | ன | | ம | | | ள |
| எ | ஞ் | ஞா | ன் | று | ம் | | ம் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JLYE 25, 2002க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**131இல் வெற்றி பெற்றோர்**
1) Mrs. Moorthi, Mississagua, Ont.
2) I. Tharany, Downtown, Ont.


* [illegible]றைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் [illegible]களை வென்றவர்!

* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.

* வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**733 kennedy Road**
**[Ken-Mark Plaza]**

# தமிழ் நாட்டில் பிரயாண சேவை

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு: 044-621-0294, 98410 - 94459

253 M.T.H. Rd. Asion Garden, #201 Villivakkam, Chennai

# ACTION HONDA


புதிய பழைய
HONDA, VOLVO
மற்றும் CHRYSLER
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
I will beat any price

ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
Life time Oil change


சிறந்த நேர்மையான சேவை
Best Service





Call me Now!! 416-704-1179

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough





# உலக தமிழோசை

கடந்த சித்திரைப் புத்தாண்டில் வெளிவந்த உலக தமிழோசை காலாண்டு சஞ்சிகை உலகாளாவிய ரீதியில் தமிழர் வாழும் நாடுகளில் தமிழர் கைகளில் தவழ்வது பெருமைக்குரிய விடயம். அடுத்த சஞ்சிகைக்கான கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் போன்றவற்றை பலர் அனுப்பியுள்ளனர். நீங்களும் உங்கள் ஆக்கங்களை அனுப்ப வேண்டிய தொலை நகல்: 416-282-4978
மின் அஞ்சல்: info@ulakathamiloszai.com

# அட்டமா சித்திகள்

இந்துமதம்; சித்தர்கள், முத்தர்கள், தவசிரேட்டர்கள், ஞானிகள், யோகிகள் பற்றிப் பேசுகின்றது. இறைவனின் அருள்பெற்ற பூரண யோகிகள் இவர்கள். கீழ்க்காணும் எட்டு சித்திகளை இவர்களால் நிகழ்த்த முடியும். அவையாவன அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பரகாம்யா, வஷித்துவம், சிஷாத்வம் என்பனவாகும்.

இத்தகைய சித்திகளை வெறும் தந்திர வித்தையென சிலர் கருதுகிறார்கள். மதத்திலோ தெய்வ நம்பிக்கையிலோ ஈடுபாடு இல்லாத சிலர் இவற்றுக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் உள்ளது என்று இன்றைய விஞ்ஞானம் ஆதாரம் காட்டுகின்றது.



அணிமா சித்தியின் மூலம் மிகச் சிறிய உருவை எடுத்துக் கொள்ளலாம். மகிமா சித்தியின் மூலம் பெரிய அளவுக்கு வளர்ந்து விடமுடியும். லகிமா சித்தியைக் கொண்டு காற்றில் மிதக்கலாம். நீர் மேல் நடக்கலாம். கரிமா சித்தியின் மூலம் மிகப் பளுவுடையவராகி அசைக்க முடியாத நிலையை அடையலாம். பிராப்தி சித்தியினால் பிறர் மனத்தில் இருப்பதைக் கண்டு கொள்ளலாம். கடந்த

நயினையம்பதி
நா. க. சிவராமலிங்கம்

காலத்தில் நடந்தனவற்றையும் எதிர்காலத்தில் வரப் போவதையும் எடுத்துக் கூறலாம். வியாதிகளைக் குணப்படுத்தலாம். பரகாம்ய சித்தி மூலம் கூடுவிட்டு கூடு பாயலாம். என்றும் இளமை மாறாமல் இருக்கலாம். வஷித்வம் என்ற சித்தி மிருகங்களை அடக்கக் கூடிய சக்தியை அளிக்கும். சிஷாத்வம் என்ற சித்தியின் மூலம் இறந்தவர்களை பிழைக்க வைக்க முடியும். சித்துக்களைச் செய்தவர்கள் சித்தர்கள் என்றே பெரும்பாலும் குறிப்பிடப்பட்டுள்ளன. இவர்கள் மகா புருஷர்களாக விளங்கியுள்ளனர். இவர்கள் இந்து மதத்தின் பெருமையை பறை சாற்றியுள்ளனர். இவற்றைச் செய்வதன் மூலம் மக்களை உய்விக்கவும், நல்வழிகாட்டவும் பக்தி மார்க்கத்தில் செலுத்தவும் வழி செய்துள்ளார்கள். இலட்சக் கணக்கான பக்தர்களின் மதிப்பையும் பெற்றுள்ளார்கள். இதனை சுயநலத்திற்காகப் பயன்படுத்தும் போது அந்தச் சக்தியை இழந்து ஒன்றும் இல்லாமல் போய்விடுகின்றார்கள்.


சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை இவ்வாறு குறிப்பிடுகின்றார். அபூர்வ சக்தி படைத்த அந்த மனிதரை சந்திக்க நானும் எனது நண்பர்களும் போனோம். நாம் விரும்பிய பொருட்களை எங்கிருந்தோ வரவழைக்க வல்லவர் என்று சொன்னார்கள். அந்த சக்தியை சோதித்துப் பார்க்க நானும் எனது நண்பர்களும் விரும்பினோம். கடுங்குளிரிலும் கோவணம் மட்டுமே அணிந்தே காணப்பட்டார். உடம்பை கட்டுப்படுத்தும் உபாயம் அவருக்குத் தெரிந்தது. அமெரிக்காவில் கிடைக்காத சில இந்தியப் பழங்களை நான் குறிப்பிட்டேன். நொடிப்பொழுதில் அவற்றை கூடை கூடையாக எங்களுக்கு முன்வரச் செய்தார். எங்களைச் சாப்பிடச் சொன்னார். நானும் என்னுடைய நண்பர்களும் தயங்கினோம். அவர்தாமே அவற்றை சாப்பிட்டார். பின்னர் நாங்களும் சாப்பிட்டோம். அவை இயல்பான சுவையுடன் இனிமையாகவே இருந்தன. அந்தப் பெரிய வரிடம் இந்தச் சக்தி உங்களுக்கு எப்படிக் கிடைத்தது என்று கேட்டேன். ஆண்டவன் அருளால் கிடைத்தது என்று அடக்கமாகச் சொல்லி விட்டார். முயற்சி முடங்கிவிடும் போது தெய்வ சக்தி அபரிதமாக தொழிற்படுகின்றது என்பதே இதன் மூலம் நாம் அறியும் உண்மையாகும். சித்து விளையாட்டுக்கள் அச்சத்தையும் ஏற்படுத்து வனவாகவும் உள்ளன.

மனிதனிடம் அபரிதமான சக்தி அடங்கிக் கிடக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையேயாம். அந்தச் சக்தியை மேலெழச் செய்பவர்கள் அற்புதங்களை விளை விக்கின்றனர். இப்படியாக தெய்வீக சக்தி மேலெழும் போது உடம்பின் சூடு அதிகரிக் கின்றது. நாடித் துடிப்பு நிமிடம் 200 என்ற அளவிற்கு உயர்கின்றது. மூளையின் இயக்கம் நான்கு மடங்கு அதிகரிக்கின்றது. முது கெலும்பை ஒட்டி ஒரு சக்தி மேலெழுந்து வருவதை உணர முடிகின்றது. அது கழுத்தின் பின்புறம் வந்து தங்கி கட்டளைக்குக் காத்திருக் கின்றது. குண்டலினி சக்தி ஏறக்குறைய இதே போன்றதேயாகும்.

ஆதிசங்கரர், திருமூலர் ஆகியோர் கூடுவிட்டு கூடுபாய்ந்தவர்கள். தியானேசுவரர் புலியை அடக்கியவர். சதாசிவப்பிரம் மேந்தரனின் துண்டிக்கப்பட்ட கை மீண்டும் கொண்டு போய் வைத்ததும் இணைந்து விட்டது. கபீர், துளசிதாசர், அகஸ்கோட் சுவாமிகள் ஆகியோர் இறந்தவர்களை உயிர்த்தெழச் செய்தவர்கள். நாயன்மார்களின் சரித்திரங்களும் அவர்கள் செய்த அற்புதங்களைக் கூறுகின்றன. எனவே மெய்ஞானம் மெய்சிலிர்க்க வைக்கும் அற்புதங்களை விளைவித்தது, விளைவித்துக் கொண்டிருகின்றது. விளைக்கும் சித்து விளை யாட்டு மனித குலத்திற்கு உய்வளிக்கும் ஒப்பற்ற சாதனை எனலாம்.

## NTE AUTO

**New Trade Engineering INC.**



ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Condition Service & Repair**



**என். ரி. இ. ஓட்டோ இங்க்**

CONTACT: SIVABALAN - **(416) 750-1573**

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCAR.

## சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவன் ஆசிரியர் சங்கத்தின் கனடா கிளையின் ஒன்று கூடல்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் கோடைக்கால ஒன்று கூடல் வருகிற யூலை மாதம் 6ஆம் திகதி (July 13Th, 2002) சனிக்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை மோனிங் சைட் பூங்காவில் பகுதிகள் மூன்றிலும் நான்கிலும் (Mroning Side Pak Unit 3 and 4) வழமை போல நடைபெறும்.

16 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும் விநோத உடை அலங்காரப் போட்டிகளும் மற்றும் பல நிகழ்ச்சிகளும் இடம்பெறும். விநோத உடை அலங்காரப் போட்டியில் பங்கு பெற விரும்புகிறவர்கள் தயவு செய்து தங்கள் ஆடைகளை கொண்டு வரவும். மேலும் 16 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கும் போட்டிகள் இடம் பெறும்.. சகல பழைய மாணவர்கள் ஆசிரியர்கள் தத்தம் குடும்பத்துடன் வருகைத்தந்து ஒன்று கூடலை சிறப்பித்து மதிய போசன உணவிலும் பங்கு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். வருகை தருபவர்கள் 30ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும். திரு. நல்லையா ரவீந்திரன் - காரியதரிசி

திரு. N. ரவீந்தின் - செயலாளர் - 416.754.2195
திரு. சந்திரன் கார்த்திகேசு - 416.291.1919
திரு. குணம் கன்ற் (Gunam Hunt) - தலைவர் - 905.472.0379

## ஞானம்ஸ் ஸ்ரூடியோ



**Introducing 1 Hour Photo Lab:**

3x5 & 8 x 12

Professional Photographer - கதிர்

**416 - 750 - 8118**

2381 Eglinton Ave., E.
Kennedy / Eglinton, Scarborough

You are cordially Invited to

## LIGHT THE FLAME OF SPIRITUALITY

## SPIRITUAL LECTURES & ENTERTAINMENT

Date : july 20, 2002
Time : 5:30 pm
Venue: Canada kandasamy Temple, scarborough, 733 Birchmount Rd.
(South of Eglinton)
toli (Prasadham) light dinner will be served3d
R.S.V.P limited seating contact: ( 416) 537-3034 / (905) 415-8649
(416) 755-3632

# விண்வெளி

104 கனி



## அந்நியர்கள் - Aliens

சென்ற தடவை றொஸ்வெல் பகுதியில் நடைபெற்ற [illegible] விபத்துப் பற்றியும் அதன் பின்னதாக நிகழ் [illegible] சம்பவங்கள் பற்றியும் கூறியிருந்தேன். அல்லவா! இன்று அதன் பின்னதாக *ufo* ஆய்வாளர்களது ஆய்விவுகளின் முடிவுகளைப் பார்ப்போம்.

வெறுமையாகிக் கிடந்த குன்றுப் பகுதியில் இருந்து எந்த ஒரு தகவலயைும் இவர்களால் பெறமுடியவில்லை. இராணுவத்தினரை அண் மித்து இவர்கள் விசாரித்த பொழுது இவர்களால் எந்தவொரு உருப்படியான தகவல்களையும் பெறமுடியவில்லை. சிலர் தமக்கு எதுவுமே தெரியாது எனக் கூறினர். வேறு சிலர் அப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்ததா என இவர்களிடமே ஆச்சரியமாகக் கேட்டனர். *Major Jesse Marcel* இப்பவும் தமது இரண்டாவது அறிக்கையை அதாவது *Rosewell* பகுதியில் நடந்தது காலநிலை அறியும் பலூனின் விபத்து என்பதனையே வலியுறுத்திக் கொண்டு இருந் தார். ஆயினும் *ufo* ஆய்வாளர்களின் தொடர்ச்சியான தேடுதலின் விளைவாக பல ஆச்சரியமான விசயங்கள் சிறிது சிறிதாக

> அதிகாலையில் குன்றுப் பகுதிக்கு விரைந்து சென்ற கிராம வாசிகள் விசித்திரமான காட்சி ஒன்றினையும் கண்டு கொண்டார்கள். சுமாராக மூன்று அல்லது நாலு அடி உயரமான மூன்று சிறிய உ[illegible]ங்களை கண்டு அவர்களையும் அவ[illegible] நடவடிக்கை களையும் நன்றாக அவதா[illegible]த்து இருக்கி ன்றார்கள். ஓர் உருவம் ஒரு பாறையின் அருகே நிலத்தில் முற்றாக விழுந்து கிடந்தது. மற்றையது பாறையில் சாய்ந்து இருந்தது. மூன்றாவதோ பாறையின் அருகே இருந்த குகை ஒன்றினுள் நுளைவதும் பின் வெளியே வந்து பாறையில் சாய்ந்திருந்த உருவத்துடன் கதைப்பதும் மீண்டும் குகைக்குள் நுளை வதுமாக இருந்தது.

வெளிவந்தன. இராணுவத்தினரின் அச்சுறுத்தல் காரணமாக விபரங்கள் தெரிவித்தவர்கள் தங்களை இனம் காட்ட மறுத்துவிட்டனர். அவ் விபரங்கள் என்ன? அதற்கான அரச அதிகாரின் பதில்கள் என்ன என்பது பற்றி இனிப் பார்ப்போம்.

விபத்து நிகழ்ந்த பகுதியில் பல வினோதமான பொருட்கள் எடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஒன்று கறுத்த பளபளப்பான உலோகத்தகடு. அத்தகடு மற்றைய சாதாரண தகடு போல் அல்லாது சில விசேடமான இயல்புகளைக் காட்டியது என்றார்கள். அத்தகட்டை சிறிய பேனாக் கத்தியால் கீறிய போது கீறப்பட்ட பகுதி முதலில் வெட்டுப்பட்டது. பின்னர் உடனேயே வெட்டுண்ட அத்தகடு தன்னிலேயே இணைந்து கொண்டது. இத்தகவலை ஒரு சிறுவன் கூறியிருந்தான். றொஸ்வெல் பகுதியில் கடமையில் இருந்த இராணுவ அதிகாரியின் மகனான அச்சிறுவன், தனது தகப்பனார் றொஸ்வெல் பகுதியில் இருந்து கொண்டு வந்த பல பொருட்களில் அதுவும் ஒன்று என்று கூறியிருந்தான். மறுநாள் அதிகாலையிலேயே அப்பொருட்களை எல்லாம் தனது தகப்பனார் எடுத்துச் சென்றுவிட்டதாகவும் அவன் கூறி யிருந்தான். இராணுவத்தினரோ அல்லது அரசாங்க அதிகாரிகளோ அப்படி ஒரு உலோகமும் இல்லை. வெடித்துச் சிதறிய பலூனின் சிறிய இறப்பர் துண்டு ஒன்றினையே அச்சிறுவன் இப்படிக் கூறியிருக்கலாம் எனக் கூறிய அதிகாரிகள் வெட்டுப்பட்ட துண்டு மீண்டும் இணைந்தது பற்றி எதுவும் கூறவில்லை. அது பற்றி தமக்கு எதுவுமே தெரியாது எனக் கைவிரித்து விட்டனர்.

இதைவிடச் சுவாரசியமான இன்னொரு விவ காரம் அதிகாலையில் குன்றுப் பகுதிக்கு விரைந்து சென்ற கிராம வாசிகள் விசித்திரமான காட்சி ஒன்றினையும் கண்டு கொண்டார்கள். சுமாராக மூன்று அல்லது நாலு அடி உயரமான மூன்று சிறிய உருவங்களை கண்டு அவர்களையும் அவர்களது நடவடிக்கை களையும் நன்றாக அவதானித்து இருக்கி ன்றார்கள். ஓர் உருவம் ஒரு பாறையின் அருகே நிலத்தில் முற்றாக விழுந்து கிடந்தது. மற்றையது பாறையில் சாய்ந்து இருந்தது. மூன்றாவதோ பாறையின் அருகே இருந்த குகை ஒன்றினுள் நுளைவதும் பின் வெளியே வந்து பாறையில் சாய்ந்திருந்த உருவத்துடன் கதைப்பதும் மீண்டும் குகைக்குள் நுளை வதுமாக இருந்தது. இதைப் பார்த்தவர்களது எண்ணத்தில் முதலில் தெரிந்தது *Alien* களே ஆகும். அவர்களது கணிப்பின் படி நடந்த விபத்தில் ஏலியன் விமானம் ஒன்று முற்றாக வெடித்துச் சிதற மூன்று ஏலியன்கள் பூமியில் விழுந்து விட்டார்கள். ஒருவர் இறந்துவிட இன்னொருவர் படுகாயம் அடைந்துவிட்டார். உயிராபத்து ஏதும் இல்லாத மூன்றாமவர் தனது சகபாடிகளுடன் தங்கி தமது உபகரணங்களில் சிலவற்றை அச் சிறிய குகையுள் வைத்திருக்க வேண்டும். அதனாலேயே அடிக்கடி குகையின் உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாக இருக்க வேண்டும் என எண்ணினார்கள். ஒருவருமே அவர்களை நெருங்கவோ அல்லது அவர்களுடன் பேசவோ தொடர்பு கொள்ளவோ எத்தனிக்கவில்லை. இவ்விவகாரம் குறித்துக் கூட இவர்கள் யாரடனுமோ கதைக்கக் கூடாது எனவும் பின்னர் இராணுவத்தினரால் எச்சரிக்கப்பட்டார்கள்.

இவ்விடயத்தை *ufologist*க்கள் சும்மா விடவில்லை. அதிகாரிகளைக் கேட்டார்கள். அவர்கள் கூறிய பதில்களை அறிவதற்கு முன்னர் வாசகர்களே! நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? உங்களது கருத்துக்கள் என்ன? அடுத்த முறை விளம்பரத்தில் வரும் அதிகாரிகளின் பதில் என்னவாக இருக்கும் என ஊகியுங்களேன் பார்க்கலாம்!


J.A.B. TRAVELS & TOURS

Top Sales Award for Cathy pacific

ஆசிய - ஐரோப்பா - அவுஸ்ரேலியா - வடமத்திய - தென்அமெரிக்க - உலகின் சகல பாகங்களிற்குமான ரிக்கற் வசதிகளுக்கு நாடவேண்டிய இடம்

J.A.B TRAVELS & TOURS.

1185 DUNDAS ST. E., # 203 **MISSISSAUGA ONT.**

**(905) 896-8320**



# பூட்டு? சாவி?

## KEERTH LOGSMITH

**வீடு-வியாபாரம்-தொழிலகம்**

வீட்டுத் திறப்புகள் தொலைந்து விட்டதா? மாற்ற வேண்டுமா? மற்றும் உங்களது சகலவிதமான பூட்டு, சாவி சம்பந்தமான பிரச்சினைகளிற்கு தீர்வு காண நினைவில் வைத்திருக்க வேண்டிய இலக்கம்.

**(416) 439-3709**

**Pager: (416) 375-7330**

## EDUCATION FUND SERICES Inc.

*The Children's Education Trust of Canada*

குழந்தைகளின் கல்விக்கான நம்பிக்கை நிதியம்



Siva Kanapathypillai
(Divisional Director)

உங்கள் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் கல்வியை ஊக்குவிக்கும் கனடா அரசாங்கத்தின் நன்கொடையை(20% Grant) பெற இன்றே நாடுங்கள்.

* டொலர் 10இல் இருந்து இத்திட்டத்தில் சேரலாம்!
* உங்கள் சேமிப்புக்கு உத்தரவாதம்!
* கல்வியை ஒருவராலும் களவாட முடியாது!


சிறந்த சேவையையும், இலவச ஆலோசனைகளையும் பெறத் தொடர்பு கொள்ளுங்கள்:

416-438-0660 / 416-438-3578 Cell: 416-899-6044

Fax: 416-438-8532 Res: 905-472-1139

1200 Markham /Rd., Suite #301, Scarb., Ont.

**முழுநேர, பகுதிநேர வேலை வாய்ப்புக்கள் உண்டு.**



# அன்புத் தமிழ்




## பூம்புகார்த் திருமணம்

காவிரி ஆறு கடலோடு சங்கமிக்கும் இடத்தில் அமைந்திருப்பது காவிரிப்பூம் பட்டினம். சோழவள நாட்டின் தலைநகரம். உயர்ந்தோர் வாழ்வதால் குறைவொன்றும் அறியாத தனிச் சிறப்பும் நீள் போக வாழ்வும் கொண்டது.

இத்தகைய புகழ் மிகுந்த புகார் நகரத்திலே வான் மழையை ஒத்த வள்ளல் ஒருவன் இருந்தான். பெயர் மாநாய்கன். அவனது குலம் தழைக்கப் பிறந்தாள் ஒரு பூங்கொடி. வானத்து வல்லிக் கொடியை ஒத்த அந்தப் பொன் னொளிக்கு வயது பன்னிரண்டு ஆகிவிட்டது. 'செந்தாமரைப் பூவிலே நிறைந்திருக்கும் திருமகளைப் போன்று எல்லோரும் போற்றும் அழகு மிகுந்தவள்' என்றும் 'தீது இல்லாத வடமீனின் திறம் இவள் திறம்' என்றும் மாதர் தொழுது ஏத்தும் பெருங்குணம் படைத்தவள். அவள் பெயர் கண்ணகி.

அதே பட்டினத்தில் சோழமன்னால் தலைமைக் குடியென உயர்த்தி வைக்கப்பட்ட பெருங்குடி மரபிலே வந்தவன் மாசாத்துவான். வாணி பத்தால் உயர்ந்து ஓங்கு செல்வத்தான். தான் பெருக்கும் செல்வத்தைப் பிறருக்குக் கொடுத்து உதவும் பெரு மனத்தான். சங்கநிதி பதுமநிதி களுக்குக் கிழவனான குபேரனை ஒத்த அந்த வள்ளலுக்கு ஒரு மகன். அவனுக்குப் பதினாறு வயது ஆகிவிட்டது. அவன் வாணிபத்துறையில் பெரும் புகழை அடைந்தவன். மதிமுக மடவார் நெஞ்சங்களில் நடமாடுகின்றவன். அவர்கள் தமது ஆயத்திலே பண்ணினும் இனிய மொழியாயினாலே, 'கண்டு ஏத்தும் செவ்வேள்' இவன் என்று புகழும் காதல் பேச்சுக்களுக்கு எல்லாம் உரிமையானவன். அந்த அழகன் பெயர் கோவலன்.



இவ்விருவருக்கும் ஒரு பெருநாளிலே திருமணம் செய்து வைக்கப் பெற்றோர் விரும்பினர். மணவினைச் செய்தியை அழகிய அணி கலன்களை அணிந்த பெண்களை யானையில் இருத்தி நகர் எங்கும் அறிவித்தனர்.

அதன்வழி, திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டன. முரசுகள் கொட்டின; மத்தளங்கள் அதிர்ந்தின; சங்குகள் முழங்கின. அரசன் ஊர்வலம் போல வெண்குடைகளின் மத்தியில் மங்கல அணியும் புகார் நகரின் வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டது.

திருமண வைபவம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அந்தக் காட்சியின் மாட்சியை இளங்கோ அடிகள் சுருக்கமாக இவ்விதம் விளக்குகின்றார்:

*மாலைதாழ் சென்னி வயிரமணித் தூண் அகத்து*
*நீல விதானத்து நித்திலம்பூம் பந்தர்க்கீழ்*
*வான் ஊர் மதியம் சகடு அணைய வானத்துச்*
*சாலி ஒருமீன் தகையாளைக் கோவலன்*
*மாமுது பார்ப்பான் மறைவழி காட்டித்*
*தீவலம் செய்வது காண்பார்கண் நோன்பு என்னை!*

திருமண மண்டபம் மாலைகள் தொங்க விடப்பெற்ற உச்சியினையுடைய வயிரமணித் தூண்களைக் கொண்டது. அந்த அழகிய மண்டபத்துள் நீலப்பட்டு விதானத்தின் கீழ் அழகிய முத்துப் பந்தர் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அதுவே மணவறையாகும். அந்த முத்து மணவறையில் சந்திரன் உரோகணியைச் சேரும் முகூர்த்த நேரத்தில், அருந்ததியை ஒத்த கண்ணகியை கோவலன் மணந்து கொள்கின்றான். திருமணச் சடங்கை அனுபவம் முதிர்ந்த அந்தணர் வேதம் ஓதி நடத்தி வைக்கின்றார்.
கோவலன் கண்ணகியை மணந்து, தீவலம்



வந்த காட்சியைக் கண்டவர் கண்கள் செய்த தவந்தான் என்னேயோ என்று இளங்கோ அடிகள் வியப்புக்குறியிலே முடிப்பதற்குக் காரணம் இருக்கிறது. கோவலன் - கண்ணகி திருமணம் சாதாரண வைபவம் அன்று. அரச திருமணம் போன்று நடந்தி செல்வந்தர் திருமணம். பூம்புகார் மக்கள் அதுவரை கண் டிராத கண்கொள்ளாத் திருமணம். அதுபோன்ற பெருமணம் இனிமேல் எவருக்காவது புகார் நகரத்தில் நடக்குமோ என்னவோ? அதனாலே அந்த அரிய திருமணத்தைக் கண்டவர் தவஞ் செய்தவராகின்றார்.

திருமணத்தின் பெருஞ் சிறப்புகளுக்கான முத்திரை மேலும் பதிக்கப்படுகின்றது. வாசனைப் பொருட்கள், நறுமலர்கள், சாந்து வகைகள், மணப்புகைகள், கவர்ச்சியான மாலைகள், சுண்ணப்பொடிகள், விளக்குகள், நல்ல கலன்கள், விரிந்த தாழிகள், முளைக் குடங்கள், நிறைகுடங்கள் என்பவற்றைத் தாங்கியவாறு பலவகைப் பெண்கள் மணப் பெண்ணைச் சூழந்தனர். அவர்களுடன் அழகான அணிகலன்களைப் புனைந்து கொண்டும் பேசிக்கொண்டும் பாடிக்கொண்டும் நாணம் மிக ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டும் மேலும் பல பெண்கள் சேர்ந்து கொண்டனர்.

அவ்விதான மலர் சூடப்பெற்ற விரிந்து வளர்ந்த கூந்தலுடைய, அழகிய பொற்கொடிகள்போன்ற பெண்கள் பலரும்

*'காதலற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல்*
*தீது அறுக'*

(காதலராகிய நீவிர் ஒருவரையொருவர் என்றும் பிரியாது, தழுவிய கைகள் நெகிழாது, தீமைகள் எதுவும் அணுகாது இன்புற்று வாழ்வீராக!)

என மணமக்களை வாழ்த்தி மலர் தூவினர்.

### கவிஞர். வி. கந்தவனம்

மேலும் 'இமயத்துக்கு அப்பாலும் இப்பாலும் எங்கும் புலிக்கொடியினை ஏற்றியவனும் போரிலே மேம்பட்டு விளங்கும் சினம் மிகுந்த வேலினை உடையவனுமாகிய கரிகாலன் எப்பாலும் தான் ஒருவனே ஆகித் தன் ஆட்சிச் சக்கரத்தைச் செலுத்தி உயர்வானாக' என்று சோழனையும் வாழ்த்தி, இந்த அழகிய உலகின்கண்ணே இருக்கின்ற ஓர் அருந்ததி போன்ற கற்பிலே சிறந்த கண்ணகியை மங்கலக் கட்டில்மீது மகிழ்ந்து ஏற்றினர்.

இதுவரை மூன்றுமுறை அருந்ததியார் கண்ணகிக்கு ஒப்பிடப்பட்டிருக்கின்றார். அருந்ததி வசிட்டமா முனிவரின் மனைவி. சிறந்த கற்பரசி. சிலப்பதிகாரமும் கற்பின் மகிமையைக் காட்டவுள்ள காப்பியமாதலால் அருந்ததியை அடுத்தடுத்து எமக்கு நினைவூட்டியிருக்கின்றார் இளங்கோ அடிகள்.


## தமிழில் இலவச சேவைகள்!!!

றொறன்ரோவில் உள்ள பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம் பின்வரும் சேவைகளை தமிழில் வழங்குகின்றது.

* குடிவரவாளர்களுக்கு வேண்டிய உதவி:
  நிரந்தர குடியுரிமைப் பத்திரம் பெறும் வழிமுறைகள்.
  குடும்பத்தினரைப் பொறுப்பேற்றல்.
* இலவச ஆங்கில வகுப்புகள் - (கணினியுடன்) நிலைகள்: 1 - 2 -3 - 4 - 5
* சமூகநல, குடும்பநல உதவி பெறுவோர்க்கான உதவியை செய்தல்.
* தொழில், மற்றும் உயர்கல்வி சம்பந்தமான ஆலோசனை வழங்குதல்.
* சுகாதாரம், சட்டம், வீட்டு வசதி போன்ற துறைகளில் ஆலோசனை வழங்குதல்.
* மொழி பெயர்த்தல் மற்றும் விண்ணப்பங்கள் நிரப்பிக் கொடுத்தல்.
* மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அங்கத்தினருக்கு வேண்டிய உதவிகள்.

மேலதிக விபரங்களுக்கு: சியாமளாவுடன் **416-261-4901 / 416-261-1380**

என்ற இலக்கங்களில் பின்வரும் சேவை நேரங்களில் தொடர்புகொள்ளவும்:
செவ்வாய் முதல் வெள்ளி வரை: காலை 9:00 மணி முதல் பிற்பகல் 4:00 மணி வரை


**எங்கள் அலுவலக முகவரி:**
பல்லின கலாச்சார குடிவரவு சமூக நிலையம்
(Polycultural Immigrant & Community Service)
3178 எக்லிண்டன் அவென்யு கிழக்கு #206 (முதல் மாடியில்)
(மார்க்கம் & எக்லிண்டன் சந்திப்பு)




### தெரிந்து கொள்ளுங்கள்

* செஞ்சிலுவைச் சங்கத்தை ஸ்தாபித்தவர் - ஹென்றி டிரனட்.
* சாரணர் இயக்கத்தை ஸ்தாபித்தவர் - பேடன் பவுல்
* தென்துருவத்தை அடைந்த முதல் மனிதர் - அமுத்னென்
* வடதுருவத்தை அடைந்த முதல் மனிதர் - ராபர்ட் பியரி.


**கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளத்தினரின்**
**விருது பெற்ற**
**VIVEKA PRINTERS**
**உங்கள் அச்சுவேலைகள் எதுவாக இருந்தாலும்**



**முதலில் நீங்கள் நாடவேண்டிய இடம்**

**80 BARBADOS BLVD.,**
**UNIT #4 SCAR., ONT.**
**416-410-6401**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ் திரைப்படங்கள்

*1987ஆம் ஆண்டு வெளிவந்த படங்களில்*

### வேலைக்காரன்

நடிக-நடிகையர்:- ரஜினிகாந்த், சரத்பாபு, ஸ்ரீகாந், வீரராகவன், சுதர்சன், டெல்லிகணேஷ், வீ.கே.ராமசாமி, செந்தில், நாசர், கே.ஆர். விஜயா, அமலா மற்றும் பலர்.

இசை - இளையராஜா
திரைக்கதை வசனம் - பாலசந்தர்
பாடல் - மேத்தா
டைரக்ஷன் - எஸ்.பி. முத்துராமன்



செல்வந்தரான ராம்ராஜின் உண்மையான பணியாள் கஜபதி. அவன் மனைவி சாவித்திரி. ராம்ராஜின் உறவினான தன்ராஜ் ராம்ராஜின் செல்வத்தை அடைய நினைக்கிறான். அதனால் ராம்ராஜையும் ஊழியன் கஜபதியையும் கொண்டுவிடுகிறான். இது நடைபெறுவதற்கு முன்னால், ராம்ராஜ் தனது சொத்துக்களையும், மகனையும் சாவித்திரியிடம் ஒப்படைத்து விடுகிறார். கஜபதி, சாவித்திரி தம்பதியினருக்கு மகன் ஒருவன் இருக்கிறான். சாவித்திரி தன் மகனை மாமனார் வளையாபதியிடம் அனுப்பிவிடுகிறாள். வளையாபதி, தம் மருமகன் ராம்ராஜின் ஆஸ்தி மீது கண் வைத்திருக்கிறாள் என்று எண்ணி விடுகிறார். சாவித்திரியின் மகன் வளையாபதியிடம் வளர, ராம்ராஜின் மகன் சா[illegible]டம் வளர்ந்து வருகிறான். ரா[illegible] மகன் ராஜ்குமார் படிப்புக்காக மேலை நாடு செல்கிறான். வளையாபதியிடம் வளர்ந்து வந்த ரகுபதி வேலைதேடி பட்டணம் வருகிறான். அவனுக்கு வையாபுரியின் உதவியால் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் வேலை கிடைக்கிறது. அங்கே அவன் கௌசல்யா என்ற அழகியை சந்திக்கிறான்.

அ து



காதலாக மாறுகிறது.

ராஜ்குமாரை கொல்ல ஓரிரு முயற்சிகள் நடைபெற்ற போதிலும் அதிஸ்ட்ட வசமாக ராஜ்குமார் தப்பித்துக் கொள்கிறான். சாவித்திரி ராஜ்குமாரைக் கொண்டு ஆஸ்தியை கவர சமயத்துக்காக காத்திருக்கிறாள் என்று அவனை நம்பச் செய்கிறான். நிஜா என்பவளை அனுப்பி ராஜ்குமாரை கொல்ல ஏற்பாடு செய்கிறான். ஆனால் ராஜ்குமாரும் நிஜாவும் காதலர்களாக மாறிவிடுகிறார்கள்.



இவற்றை எல்லாம் கவனித்து வந்த ரகுபதி ராஜ்குமாரை சந்திக்க நேரிடுகிறது. இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர். ரகுபதிக்கு சாவித்திரியின் மேல் பாச உணர்வு ஏற்படுகிறது. அவள் தான் தன் தாய் என்று தெரியாமல் சமயம் பார்த்து வளையாபதி அங்கு வருகிறார். உண்மை வெளியாகிறது. கொடியவர்களை ஒழிக்க சபதம் செய்கிறான், ரகுபதி. சட்டத்தின் முன் குற்றவாளியாக கொண்டு நிறுத்துகிறான்.

நடிக, நடிகையர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட கதாபாத்திரங்களில் திறம்பட நடித்துள்ளார்கள். ரஜினிக்காந்த் "பாணி"யில் பல காட்சிகள் இருக்கின்றன. அவரும் தனது திறமைகளைக் காட்டி இரசிகர்களின் பாராட்டுதல்களை பெறுகிறார். வசனத்தை பாலச்சந்தர் எழுத பாடல்களை மேத்தா எழுத, இளையாராஜ இசையமைத்துள்ளார். எஸ்.பி. முத்துராமன் திறம்பட இயக்கி வசூலில் வெற்றிப் படமாக்கியுள்ளார். "வேலைக்காரன்" வெற்றிப் படவரிசையில் இடம்பெற்ற படம்.

### நட்சத்திரங்களின் முதல் படம்




* சுகன்யா - புது நெல்லு புது நாத்து
* ரஞ்சிதா - நாடோடி தென்றல்
* ஹீரா - இதயம்
* ஷோபனா - எனக்குள் ஒருவன்
* கே.ஆர்.விஜயா - தங்க ரத்தினம் (சிறிய வேடம்), கற்பகம்
* ஜெயலலிதா - வெண்ணிற ஆடை
* வாணிஸ்ரீ - காதல் படுத்தும் பாடு
* வையந்திமாலா - வாழ்க்கை
* ஜெயந்தி - அன்னை இல்லம்
* லட்சுமி - ஜீவனாம்சம்


UNITED PERSONAL INJURY ASSOCIATES

வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?

அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்



உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
$1000.00
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

UNITED PERSONAL INJURY ASSOCIATES
The Car Accident People
ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்

பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்

உங்களுக்குத் தெரியுமா?
இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் $172,000.00 வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

விபத்து உங்கள் தவறானாலும் கூட
உங்களால் $172,000.00 டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.
மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)
இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

தீபன் - 416-505-9804


* 5255 Yonge Street, Suite 200, North York
* 257 Dundas Street E., Unit 1, Mississauga
* 29 King Street E., Unit 7, Kitchener
* 75 Collier St., Unit A, Barrie
* 507-251 Bank Street, Ottawa
* 195 Main St. East, 1st Floor, Hamilton



YOGA CLASSES
For Natural Cure Health & Peace of Mind

Raji (Ellango) "Yoga Bhooshna"
(Certified Yoga Instructor)

(416) 743-8173
Fax: (416) 743-8392
78 Riverdale Dr., Etobicoke Ont. M9V 2T7





YARLCAN
STEAM CLEANING

* CARPET CLEANING * DUCT CLEANING

உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்-

மோகன்: (905) 887-7436
Cell: (416) 721-9709





கலைமகள்
புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

SCARBOROUGH
3238 Eglinton Ave., E.
Scarborough, Ont.
(416) 265-3605

SCARBOROUGH
3850 FINCH AVE. E. . GO
1A SCARBOROUGH,ONT.
(416) 292-9319

DOWNTOWN
594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
(416) 921-5018


# சோதனை மேல் சோதனை போதுமடா சாமி!!!

# உதைபந்தாட்டம்



உலகில் பில்லியன் கணக்கான இரசிகர்களை எல்லாம் உள்ளடக்கிய இந்த உதைபந்தாட்டம் 2002 உலக கிண்ணத்தில் பல பெரும் அணிகளுக்கு எல்லாம் சோதனை மேல் சோதனைக் காலம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கே பிரான்ஸ்? எங்கே ஆர்ஜென்ரினா? எங்கே இத்தாலி? யார் இந்த செனேகல்? யார் இந்த துருக்கி? யார் இந்த கொரியா? கேள்விகள் மேல் கேள்விகள்? உதைபந்தாட்ட இரசிகர்களின் மனதை துளைத் தெடுக்கும் கேள்விகளாகும். இம்முறை உலக கிண்ணத்தில் பணத்தை இழந்தவர்கள் ஏராளம். மனத்தை இழந்தவர்களும் ஏராளம். எங்கே சிடான்? எங்கே FIGO? எங்கே பற்றிசுட்டா? எங்கே பேக்கம்? யார் இந்த மியுங்? யார் இந்த Klose?

பல பெரும் தலைகள் உருட்டப்பட்டு, பல புதிய தலைகளை தோற்றுவித்த 2002 உலககிண்ணப் போட்டிகளை உண்மையிலேயே பாராட்ட வேண்டும். 48 வருடங்களின் பின்பு உலக கிண்ணத்தில் தேர்வு பெற்ற துருக்கி அணி அரைஇறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது, உலக கிண்ண சரித்திரத்தில் ஆசிய நாடான கொரியா அரைஇறுதி ஆட்டத்திற்கு முன்னேறியது, ஜப்பானில் புதிய விஞ்ஞான தொழில்நுட்பத்தின் மூலம் புதிய புல்தரை! புதிய பந்து! அப்பப்பா எவ்வளவு புதுமை இந்த உலக கிண்ணத்தில்!



South Korea's Hong Myung-bo (L) and Germany's Miroslav Klose jump for the ball in the first half of the world cup semi-final match in Seoul, June 25, 2002. Germany stopped South Korea's dream run with a 1-0 victory on Tuesday to reach the world cup final for a seventh time- 'they had more experience', said Hong.

அரைஇறுதி ஆட்டத்திற்கு தேறிய 4 நாடுகளை இங்கு பார்ப்போம். முதலில் துருக்கி நாட்டைப் பார்ப்போம். 1954ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதாவது 48 வருடங்களின் பின்பு உலக கிண்ணத்தின் இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவு பெற்றது. Sukar, Mansiz போன்ற திறமைவாய்ந்த செனேகல் அணியை வென்ற தன் மூலம் இரசிகர்களின் கவனத்தை தன்பக்கம் திரும்பியுள்ளது.

கொரியா அணியை பார்ப்போம்:- போர்த்துக்கல், ஸ்பெயின், இத்தாலி ஆகிய முப்பெரும் அணிகளை வீடு திருப்பிய அணி இது. 1995-1998 ஆண்டு பகுதியில் Holland நாட்டின் திறமையை உலகிற்கு எடுத்தியம்பிய coach ஆன Hidding Guus அவர்களின் சிறந்த பயிற்சி அளிப்பில் கொரிய அணி இரசிகர்களின் கவனத்தை எல்லாம் தன் பக்கம் திருப்பியுள்ளது. தன் சொந்த மண்ணில், சொந்த மக்களுக்கு முன்நிலையில் விளையாடி வரும் இவ் அணி இதனால் மிகவும் பலம் பொருந்திய அணியாக திகழ்ந்துள்ளது. 1954ஆம் ஆண்டின் பின்பு ஒவ்வொரு உலக கிண்ணப் போட்டிகளிலும் (1986, 90, 94, 98, 02) தவறாது பங்கு பற்றி வருகின்றது. அரை இறுதியாட்டத்திற்கு முன் னேறிய ஒரேயொரு ஆசிய நாடாகும். சாபும், ஜயோங்போ போன்ற திறமையான இளம் வீரர்களை உள்ளடக்கியது.

அடுத்து ஜேர்மன் அணியைப் பார்ப்போம்:- 16 தடவைகள் உலக கிண்ணப் போட்டிக்குத் தெரிவான நாடு. இவர்களின் தன்னம்பிக்கையே இவர்களுக்குப் பெரும் பலம் ஆகும். 1954, 1974, 1990 ஆகிய மூன்று உலக கிண்ணங்களை வென்ற நாடு 1966, 1982, 1986 ஆகிய உலககிண்ணங்களில் இரண்டாம் இடத்தைப் பெற்ற நாடு. ஆக மொத்தமாக 6 தடவைகள் உலக கிண்ண இறுதிப் போட்டிகளில் பங்குபற்றிய நாடாகும். இந்த அணியின் தலைவரும், கோல் காப்பாளரும் ஆகிய ஒலிவர்கான் இந்த ஜேர்மன் அணியின் பலமாகும். 1990 உலககிண்ணத்தில் பல



Soccer fans follow the FIFA world Cup semi-final match Germany Vs South Korea on a giant screen in the western German town of Hanau, 25 June 2002. Michael Ballack scored the goal for the German team. AFP PHOTO

இரசிகர்களையும் மகிழ்வித்த ஜேர்மன் நாட்டு வீரரான ருடி Voller அவர்களின் பயிற்சி அளிப்பில் முன்னேறி வந்துள்ளது. 1994, 1998 இரு உலக கிண்ணத்திலும் கால் இறுதி யாட்டங்களில் தோல்வியுற்று பல இரசிகர்களின் அதிருப்தியை சம்பாதித்துக் கொண்டது.

அடுத்து பிரேசில் அணியைப் பார்ப்போம். உலகிலேயே 17 உலககிண்ணப் போட்டிகளில் பங்கு பற்றிய ஒரே ஒரு நாடாகும். ஜேர்மனி போலவே 6 தடவைகள் இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய அணியாகும். 1958, 1962, 1970, 1994 நான்கு தடவைகள் உலக கிண்ணத்தை வென்ற ஒரே ஒரு நாடாகும். 1950, 1998 இரண்டாவது இடத்தைப் பெற்றது. ஆனால் இம்முறை (2002) இந்த உலக கிண்ணப் போட்டிகளில் பங்கு பெறும் நிலைக்கு தேறுமா என ஒரு காலகட்டத்தில் இக்கட்டான நிலையில் இருந்த பிரேசில் அணி ஒருவாறு தப்பிப் பிழைத்து உலககிண்ண சுற்றுப் போட்டிக்குத் தெரிவானது. Carlos, Ronaldo, Rivaldo, Ronaldinho போன்ற திறமை வாய்ந்த வீரர்களை உள்ளடக்கிய அணியாகும்.

**எஸ். கணேஷ்**

அடுத்து நடைபெற்ற அரை இறுதி யாட்டங்களைப் பார்ப்போம்:- ஜேர்மன் அணியும் கொரியா அணியும் மோதின. உலககிண்ண சரித்திரத்தில் முதன் முதலில் ஆசிய நாடு தனது சொந்த மண்ணில் 65 பார்வையாளர்கள் மைதானத்தில், 7 மில்லியன் கொரியன் இரசிகர்கள் தொலைக்காட்சியில் பார்த்து இரசிக்க அரைஇறுதியாட்டத்தில் பங்கு கொண டது. கொரியா நாட்டை எங்கு பார்த்தாலும் சிவப்பு ஆகவே காணப்பட்டது. "Red Devils" என்று வர்ணிக்கப்பட்ட கொரியா அணி மூன்று தடவை சம்பியனான ஜேர்மன் அணியிடம் 1 : 0 என்ற கோல் அடிப்படையில் தோல்வியை கண்டது. உண்மையில் ஜேர்மன் அணி ஆடிய ஆட்டம் Team Sports என்றால் என்ன என்பதை எடுத்துக் காட்டும் முறையில் அமைந்திருந்தது வரவேற்கத்தக்கது. அதுமட்டுமல்லாமல் இந்த ஜேர்மன் வெற்றியில், அதிகளவு பங்கு ஜேர்மன் கப்ரனும், கோல் காப்பாளருமான ஒலிவர் கான்னையே சாரும் என்றால் மிகையாகாது. 17வது தடவையாக நடைபெறும் உலக கிண்ணப் போட்டியில் 7வது தடவையாக ஜேர்மன் அணி இறுதியாட்டத்திற்குத் தெரிவாகி யுள்ளது குறப்பிடத்தக்கது. இறுதியாட்டத்திற்கு ஜேர்மனின் சிறந்த வீரரென கருதப்படும் Ballack அவர்கள் இரண்டாவது மஞ்சள் அட்டை பெற்ற படியால் விளையாடமாட்டார் என்பது குறிப்பிடத் தக்கது.

அடுத்து இரண்டாது அரைஇறுதியாட்டமான பிரேசில், துருக்கி அணிகளுக்கிடையிலான ஆட்டத்தைப் பார்ப்போம். பிரேசில் அணி 1 : 0 என்ற கோல் ரீதியில் வெற்றீ ஈட்டியது. Ronaldo 49வது நிமிடத்தில் கோலை போட்டு பிரேசிலுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தார். இதன் மூலம் Ronaldo 6 கோல்களைப் பெற்று Golden Boots விருதிற்கான ரோபட்டியில் முதலாம் இடத்தில் திகழ்கின்றார். பிரேசில் அணி இதன் மூலம் 7வது இறுதிாயட்டத்தில் (உலககிண்ணப் போட்டிகளில் தகுதி பெற்றுள்ளது)

பிரேசில் அணியும் ஜேர்மன் அணியும் இறுதி யாட்டத்தில் மோதுவதன் மூலம் உலக கிண்ணச் சரித்திரத்தில் சாதனை நிகழ்த்த உள்ளனர். இரு நாடுகளும் மட்டுமே 7வது தடவை இறுதியாட்டத்தில் உலககிண்ணத்தில் மோத உள்ளன. பிரேசில் 4 தடவைகள் சம்பியனும் இரண்டு தடவைகள் Runner-up ஆகவும், ஜேர்மனி 3 தடவைகள் சம்பியனும், 3 தடவைகள் Runners-up ஆகவும் வந்த இரு நாடுகள் ஆகும். 72 வருட உலககிண்ணச் சரித்திரத்தில் இதுவே முதல் தடவையாக உலககிண்ணஇறுதியாட்டத்தில் பிரேசிலும் ஜேர்மனியும் மோதவிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் அடுத்த விளம்பரம் இதழில் உலககிண்ண மேலதிக இறுதித் தரவுகளுடன் உங்களைச் சந்திப்போம். "நன்றி"


**தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்**

**ரவி நடராஜா**

**Accident & Traffic Ticket**

(14 Years Insurance Claims Experience)



* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்.
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

(416) 245-6555 2095 Weston Road, Suit 203, Toronto, Ont.
(416) 755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scar.

**SAFETY TRUCKS**

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் Truck DRIVING பயிற்சி இடம் (8ஆம் ஆண்டு) வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்

**We Accept Welfare & Unemployment Insurance**




* தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
* One On One Training
* அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

*In Classes*

* 365 (Learning Permit)
* Lock Books
* Air Brake (Z)
* Dangerous Goods
* Border Crossing
* Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**

**Truck Driving** போதனாசிரியர்

(15 Years Canadian Experience with Trucks)

(905) 793-9546 / (416) 616-5979

**250 Summerlea Road, Brampton, Ont.**

**கனடா** (முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

கனடா பரப்பளவில் உலகில் இரண்டாவது பெரிய நாடாகும். பத்து மாகாணங்களையும், மூன்று பிரதேச பிரிவுகளையும் கொண்ட அமைப்பாகும். தலைநகர் ஒட்டாவா ஆகும். தேசியக்கொடி மேபிள் இலையுடன் கூடிய சிவப்பு, வெள்ளை நிறத்தைக் கொண்டுள்ளது. கனடாவின் தேசிய கீதம் "ஓ கனடா!" என்ற பாடலடியுடன் தொடங்குகிறது. கனடாவின் தேசிய மிருகம் - Beaver.

இறுதியாக ஏப்ரல் 01, 1999இல் புதிய பிரதேசம் உருவாகியது. இதன் பெயர் நுணவுற் (Nunavut). தலைநகரம் - Iqualavut.

கனடா நாட்டின் பிரதம மந்திரி (2002) ஜீன் கிறிச்சியான் ஆவார். மூன்று வகை அரசுகள் காணப்படுகின்றது. மத்திய அரசு, மாகாண அரசு, நகர சபை ஆகும். மாகாண அரசை அ[illegible] செய்பரை முதலமைச்சர் எனவும், நாட்டின் தலைவர் பிரதம மந்திரி என அழைக்கப்படுவர். கனடாவின் இராச்சிய தலைவராக மாட்சிமை பொருந்திய எலிசப் மகாராணி II காணப்படுகின்றார். அவரின் பிரதிநிதியாக கவனர் ஜெனரல் செயல்படுகிறார். கனடாவைச் சுற்றி மூன்று பக்கத்திலும் சமுத்திரங்கள் காணப்படுகின்றன. மேற்கில் பசுபிக் சமுத்திரம், கிழக்கில் ஆட்டிக் சமுத்திரம், அட்லாண்டிக் சமுத்திரம் காணப்படுகின்றது. கனடாவில் மெக்கன்ஸி, நெல்சன், செயின்ற் லோறன்ஸ், யூகான் ஆகியவை முக்கிய நதிகளாகும். இங்கு சுப்பீரியர், மிக்சிக்கன், ஹீரன், ஈரி, ஒன்ராரியோ, கிறேட் லேக், வினிப்பெக் எனப் பெரிய ஏரிகள் உள்ளன.

பயிர் நிலம் 4%மும், காடுகள் 35%மும் காணப்படுகின்றன. அதிகமான நிலப்பரப்புகளில் பயிரிடுவது கோதுமை, பார்லி, ஓட்ஸ், இதர பயிர்களாகும். தொழில் வளர்ச்சி மிகுந்த நாடாகும்.

ஏற்றுமதிப் பொருட்கள் நியூஸ் பிறிண்ட், கோதுமை, மரம், நிக்கல், செம்பு, தங்கம், மீன், உரங்கள், ஈயம், இரும்பு, கம்பளி என்பனவாகும்.

| மாகாணங்கள் | தலைநகரங்கள் | இணைந்த ஆண்டு |
|---|---|---|
| பிரிட்ஷ் கொலம்பியா | விக்டோரியா | 1871 |
| அல்பேட்டா | எட்மென்ரன் | 1905 |
| சஸ்கச்சுவான் | றெயீனா | 1905 |
| மனிரோபா | வினிபெக் | 1870 |
| ஒன்ராரியோ | ரொரன்ரோ | 1867 |
| கியூபெக் | கியூபெக் சிற்றி | 1867 |
| நியூபுறுன்ஸ்வீக் | பீடிறிக்சன் | 1867 |
| நோவாஸ்கோசியா | ஹலிபக்ஸ் | 1867 |
| பிரின்ஸ் எட்வேட் ஐலண்ட் | சாலற்ரவுண் | 1873 |
| நியூபவுன்லாண்ட் | சென். ஜோன்ஸ் | 1949 |

| பிரதேசங்கள் | தலைநகரங்கள் | இணைந்த ஆண்டு |
|---|---|---|
| நோத்வெஸ்ற் ரெரிரோறீஸ் | யலோநைவ் | 1870 |
| யூகோன் | வைற்கோஸ் | 1898 |
| நுணவுற் | இக்குவாலிற் | 1999 |


# BPR RENOVATION



* NEW BSMT * DRY WALL
* PLUMBING * ELECTRICAL
* PAINTING




சந்திரன்: 416-431-6806 Cell: 416-829-7955

# WINDOW COVERING

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்.

**BLINDS DRAPERIES AND SHUTTERS**
- Venetian Blinds
- Vertical Blinds
- Roller Shades
- Pleated Shades
- Cellular Shades



இருபத்தேழு வருடங்களுக்கு மேல் அனுபவம் உள்ளவர்களால் உங்கள் வீட்டிற்குத் தேவையான திரைச் சேலைகளைத் தைத்துக் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:
என். செல்வம்
416.332.8482
416.419.9247
905.201.7733

FREE ESTIMATE

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch)
Scarborough, Ont.

கடந்த 5 ஆண்டுகளாக **SUMMER CLASSES** நடாத்திச் சாதனை புரிந்த



# V V TUTORING CENTRE



தன் 2002க்கான

## Summer Classes - கோடை விடுமுறை வகுப்புகளை

02-07-2002இல் ஆரம்பமாகின்றது

**Kennedy** வளாகத்தில்
(Kennedy & Eglinton)
காலை 8:30 முதல் மாலை 3:30 வரை எல்லா வார நாட்களிலும்


**Bellamy** வளாகத்தில்
(Bellamy & Ellesmere)
மாலை 5:30 முதல் இரவு 9:00 வரை குறிப்பிடத்தக்கது

**Markham** வளாகத்தில்
(Middlefield & Elson)
காலை 8:30 முதல்மாலை 3:30 வரை எல்லா வார நாட்களிலும்

**Mississauga** வளாகத்தில்
Jeya Thurka Tempte Hall
மாலை 6:00 முதல் 9:00 வரை குறிப்பட.ட தினங்களில்சனிக்கிழமைகளில் காலை 9:00 மணி முதல் 1:00 மணிவரை

[illegible]கல தரத்தினருக்கும், சகல பாடங்களும் ஒன்ராரியோவால் கறப்பிப்பதற்கான தகுதி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்.
❑ கற்கை நெறி ஜுலை, ஆகஸ்ட் ஆகிய இரு மாதங்களும் இடம் பெறும்.

உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பினை, தரம் மிக்க கல்வியை உறுதி செய்து, நிம்மதியாக உங்கள் வேலைகளில் ஈடுபட நாடுங்கள்



**வீ.வீ ரியூரறிங் சென்ரர்**
416.701.1763 / 905.471.3084
(தயவு செய்து தொலைபேசியில் தங்கள் செய்தி விபரத்தைப் பதிவு செய்யவும்)
**எங்கள் சேவை உயர்ந்தது! எங்கள் மாணவர் முன்னணியில்!!**
**எங்கள் கட்டணம் குறைந்தது!!!**



## கனேடிய தமிழ் வானொலி CTR இன் காற்றலைகளில்

யூன் 28 வெள்ளி தன் நாளை முடிக்கும் புள்ளியிலிருந்து...
....யூலை 1 திங்கள் தன் நாளை முடிக்கும் புள்ளி வரை

# காற்றுச் சுவடுகள்

# 72
## மணி நேரம்

வரவேற்பாளர்: 416-264-8798
எண்ணங்கள்: 416-264-0655
நிகழ்ச்சிப்பங்கேற்பு: 416-264-0699
தொலை நகல்: 416-264-9500

CTR
கனேடிய தமிழ் வானொலி
CANADIAN THAMIL RADIO (CTR)
www.ctr24.com

3வது ஆண்டை நிறைவு செய்து கொண்டு,
4வது ஆண்டில் கனேடிய காற்றலைகளை
ஆக்கிரமித்துக் கொண்டு முதல் தர நேயர்களின்
ஏகோபித்த தெரிவாக ஒலிக்கும் உங்கள் வானொலி

WWW.CTR24.COM

சிறப்பலைவரிசையில் சிறப்பொலிபரப்பில் பக்கதுணையாகவிருக்கும் வர்த்தக விளம்பரதாரர்கள், நேய நெஞ்சங்கள் முகாமைத்துவ நிர்வாகிகள் நண்பர்கள் அனைவருக்கும் வானொலி கலைஞர்களின் கோடானகோடி நன்றிகள்.

நிமிடத்திற்கு நிமிடம் காற்றுச் சுவடுகள்

## போட்டிகள், பரிசுகள், புதுமைகள்

தாயகத்திலிருந்து சக்தி வானொலி, ஐரோப்பிய ஐபிசி தமிழ் வானொலி,மற்றும் அவுஸ்திரேலிய வானொலிகளுடனான நேரடி இணைவுகளுடன் உங்கள் கனேடிய தமிழ் வானொலி

உங்கள்
அறிவித்தல்கள்,
விளம்பரங்கள்,
ஐரோப்பிய IBC
கனேடிய CTR
வானொலிகளில்
தவழ
அழையுங்கள்
416-264-8798
OR
416-629-6404

ஜீலை 1ம் திகதி
3வது ஆண்டு பூர்த்தி செய்து
4வது வெற்றிகரமான ஆண்டில்........

உங்களுடன் ப்ரியமுள்ள கலாதரன்

416-264-8798

**மண்ணையும் மனங்களையும் நேசிப்போம்**




JULY 01,02

# முதலீடு - ஓர் அறிமுகம்

**(Investments an Introduction)** -விக்னேஷ்



பத்திகத்துறையை பத்திரமாகப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றுள்ளவர்கள் பத்திகத்துறை நிர்வாகிகள் என்று பார்த்தோம். பங்குச் சந்தையோடு தொடர்புடைய மற்ற சில அமைப்புகளை இப்போது பார்ப்போம்.

**பங்குத் தொடர்பகம்:** (stock exchanges)
